அதிகரிக்க பல்வேறு வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, அந்தப் பகுதியில் மாணாக்கர்களுடைய சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருக்கும்பட்சத்தில், இருக்கின்ற கல்லூரிகளிலே இடம் போதவில்லையென்றால், வரக்கூடிய காலகட்டங்களில் அரசானது அதுகுறித்துப் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

105—

அங்கன்வாடி மையம்

***16618—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, கிடாரம் ஊராட்சி, சூரம்பட்டியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி சட்டமன்றத் தொகுதி, தொட்டியம் ஒன்றியம், சூரம்பட்டியில் நடப்பு நிதியாண்டில் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

முற்பகல் 10-25

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ணாது உழைத்து, உறங்காது விழித்து, இந்த நாட்டை ஆண்ட மகராசியே, எங்கள் அன்னை மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியையும், இயக்கத்தையும் சிறப்பாக வழி நடத்தும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வரையும், மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதல்வரையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி, காவேரி நதி நீர் உரிமையை மீட்டெடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், காவேரி டெல்டா பாசன விவசாயிகள் சார்பாகவும், எனது முசிறி தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிடாரம் ஊராட்சி, சூரம்பட்டியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் 20 குழந்தைகள் பயின்று வருகின்றனர். அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்து, மோசமான நிலையில் உள்ளது. ஆகவே, அந்த மையத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தருவதாக உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

தரம் உயர்த்துதல்

***11891—திரு. பி.என்.பி. இன்பசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—